<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.234/2015</u>
<u>நாள். 18.03.2026</u>

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18.03.2026 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==================================================================

| | |
|---|---|
| பெயர் = திருமதி. அர்ச்சனா<br>நீதிமன்ற ஆணையர். | கணவர் பெயர்= திரு.தினேஷ் |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==================================================================

<u>**CW1 மு.வி**</u>

1) நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.701/2015 ஆணையர் மனுவில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு, மேற்படி மனுவில் வழக்கு சொத்தை முதல்நிலையாகவும், பின்னர் இறுதிநிலையாகவும் ஆய்வுகள் செய்து, அதன் அடிப்படையில் முதல்நிலை மற்றும் இறுதிநிலைஅறிக்கைகள் மற்றும் வரைபடங்கள் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கில் நீ.சா.ஆ.1 முதல் நீ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. இது குறித்து சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2) நான் வழக்கு சொத்தை முதன் முதலாக 02.07.2015ல் நீதிமன்ற உத்தரவு பெற்று 03.07.2015ல் ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் அவசர நிலையில் நியமிக்கப்பட்டதால், நான் முதல்முறையாக வழக்குசொத்தை ஆய்வு செய்த போது நில அளவையருடன் செல்லவில்லை என்றால் சரிதான். எனது முதல்நிலை

அறிக்கை மற்றும் வரைபடத்தை 23.07.2015ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் நிலஅளவையருடன் செல்லாததால் வழக்கு சொத்துக்களின் அளவுகள் குறித்து நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3) எனது முதல்நிலை அறிக்கையில் தாவா பாதையின் அளவுகளை எதன் அடிப்படையில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் டேப் வைத்து அளந்ததன் பேரில் அளவுகளை குறிப்பிட்டுள்ளேன். எனக்கு அளித்த வாரண்ட்டில் 2 அட்டவணை சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளன என்றால் அந்த காலக்கட்டத்தில் மனு நகலுடன் ஆய்வு செய்ய செல்லும் வழக்கம் இருந்ததால், வாரண்டில் தனியாக தபசில் விபரம் எதுவும் காட்டப்படவில்லை.

4) அதன்பின்னர் நில அளவையருடன் சென்று, வழக்கு சொத்தை ஆய்வு செய்து 15.11.2019ல் எனது இறுதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 2 அயிட்ட சொத்துக்களையும், நில அளவையர் எனக்கு அளந்து காட்டினாரா என்றால் அளந்து காட்டினார். வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களுக்கும் கிழமேல், தென்வடல் அளவுகளை நான் எனது இறுதிநிலை அறிக்கையிலோ, வரைபடத்திலோ காட்டவில்லை என்றால் சரிதான், வழக்கு 1வது அயிட்ட சொத்தான புல எண்கள்.53/72, 53/73 ஆகியவற்றுக்கு கிழமேல் அளவு மட்டும் அறிக்கையில் காட்டியுள்ளேன்.

5) வழக்கு 1வது அயிட்ட சொத்திற்க்கு தென்வடல் அளவுகளை நான் எனது இறுதிநிலை அறிக்கையிலோ, வரைபடத்திலோ காட்டவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு 1வது அயிட்ட

சொத்தினை எனது இறுதிநிலை வரைபடத்தில் என்னவாக காட்டியுள்ளேன் என்றால் ABCD என்று காட்டியுள்ளேன். எனது இறுதிநிலை வரைபடத்தில் A–A1 ஆகியவற்றிற்கு இடையே கிழமேலாக ஒரு காலியிடம் உள்ளதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

6) A–A1 ற்கு அளவுகள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் தென்வடல் அகலம் 1.1 மீட்டர் என்று காட்டியுள்ளேன். A1–C ற்கு அளவுகள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. B1 – D ற்கு தென்வடல் அளவுகள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தாவா 2 வது அட்டவணை சொத்துக்களின் கிழமேல், தென்வடல் அளவுகளை எனது இறுதிநிலை அறிக்கை மற்றும் வரைபடத்தில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

7) எனது இறுதிநிலை அறிக்கையில் 1 ஹெக்டேர் 54 ஏர்ஸ் என்று நான் குறிப்பிட்டுள்ள பரப்பளவு எந்த புல எண்ணிற்கு உரியது என்றால் தாவா 1,2 அயிட்ட சொத்துக்களை மொத்தமாக சேர்த்த பரப்பளவு தான் 1 ஹெக்டேர் 54 ஏர்ஸ். நில அளவையர் வரைபடத்தையும், அறிக்கையும் கோரி நில அளவையருக்கு அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் நான் நில அளவையரிடம் அவரது வரைபடம் மற்றும் அறிக்கையை கேட்டும் அவர் கொடுக்காததால், மனுதாரரிடம் பெற்று தரசொல்லி கேட்டேன், ஆனால் கிடைக்கவில்லை.

8) வழக்கு சொத்தை 2 வது முறை அளவீடு செய்யும் போது வழக்கு 1 வது அட்டவணை சொத்திற்குரிய அளவுகளை குறிப்பிட கோரி மனுதாரர் தரப்பில் குறிப்பாணை எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் எனது இறுதிநிலை அறிக்கை மற்றும் வரைபடத்தில் வழக்கு 1 வது அட்டவணை சொத்திற்குரிய அளவுகளை குறிப்பிடவில்லை

என்றாலும், அதற்கான காரணத்தை நான் எனது அறிக்கையில் கூறவில்லை என்றாலும் சரிதான். எதன் அடிப்படையில் A–A1 = B–B1=1.1 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியாக நியாபகம் இல்லை. வழக்கு சொத்துக்களின் அளவுகள் குறிப்பிடப்படாததால் எனது இறுதிநிலை அறிக்கை முழுமைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு 1,2 அயிட்ட சொத்துக்கள் மேடு பள்ளமாக இருந்ததா அல்லது சமமாக இருந்ததா என்றால் சமமாக தான் இருந்தது.

9) என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள இடம் தான் நான் இவ்வழக்கில் ஆய்வு செய்த வழக்கு சொத்து என்றால் சரியாக தெரியவில்லை. எனது இறுதிநிலை வரைபடத்தில் XY ல் இருந்து கீழ்புறமாக குளத்துமேட்டு வாய்க்கால் என்ன அமைப்பு இருந்தது என்றால் பாதை இல்லாதது போல் வேலி அமைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வேலி அமைக்கப்பட்டதாக எனது இறுதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது இறுதிநிலை வரைபடத்தில் வேலி ஏதேனும் காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் பின்னதாக இறுதிநிலை ஆய்விற்கு சென்ற போது நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியோர் வந்து வழக்கு சொத்துக்களை அளவீடுகள் செய்து காட்டினர் என்றால் சரிதான். நில அளவையர் அளவீடு செய்து குறிப்புகள் கொடுத்தாரா என்றாலும், அதனை நான் குறித்துக்கொண்டேனா என்றாலும் ஆமாம், குறிப்புகள் கொடுத்தார், அதனை நானும் குறித்துக்கொண்டேன்.

2) எனது முதல்நிலை வரைபடத்தில் 6 அடி உயர கம்பிவேலி அடைப்பை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனது இறுதிநிலை அறிக்கை பத்தி 11 ல் புல எண்கள்.53/73, 53/72 அளவுகள் சரியாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது இறுதிநிலை அறிக்கை பக்கம் 3 ல் பாரா 16(1) ல் புல எண்.53/61 ன் தென்பகுதியில் பில்லர்கள் வரிசையாக ஊன்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நில அளவையர் ஆய்வு அறிக்கையின்றி, நீதிமன்றத்தில் என்ன காரணத்தினால் எனது அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் எனது கையிருப்பில் இருக்கும் குறிப்புகளை வைத்து அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய கோரி நீதிமன்றம் அறிவுறுத்தியதன் பேரில் நில அளவையர் ஆய்வு அறிக்கையின்றி, எனது அறிக்கையை தாக்கல் செய்தேன்.

3) நில அளவையர் தனது ஆய்வறிக்கையை கொடுக்காததால் நான் மனுதாரரிடம் அதனை பெற்றுதர கேட்டேன் என்றாலும், அதன் பிறகும் நில அளவையர் அதனை சமர்ப்பிக்காததால் அது குறித்து மனுதாரர் நடவடிக்கை ஏதேனும் எடுத்தாரா என்றாலும் மனுதாரர் முயற்சி செய்தார், நடவடிக்கை எடுத்தது குறித்து எனக்கு தெரியாது.

<u>மறுவிசாரணை</u>

சர்வேயர் குறிப்புகள் கொடுத்து நான் குறிப்பு எடுத்துக்கொண்டதாக எனது குறுக்குவிசாரணையில் கூறியுள்ளேன், மேற்படி குறிப்பை எனது இறுதிநிலை அறிக்கையுடன் இணைத்துள்ளேனா அல்லது தற்போது என் கைவசம் வைத்துள்ளேனா என்றால் எனது இறுதிநிலை அறிக்கையுடன் குறிப்புகளை இணைக்கவில்லை, நான் அறிக்கை தாக்கல் செய்து 10

வருடங்கள் ஆகிவிட்டதால், மேற்படி குறிப்பு தற்போது என் கைவசமும் இல்லை.